**விதைக்காமலே ஒரு அதிசிய அறுவடை.. வறண்ட பகுதியிலும் வளமாக விளையும் சீத்தா!**



‘அனோனா ரெடிகுலேட்டா’ என்ற தாவரவியல் பெயரைக் கொண்ட சீத்தா பழத்தை ‘கஸ்டர்டு ஆப்பிள்’ என்று ஆங்கிலத்தில் அழைப்பர். நம் ஊரில் சீத்தா பழத்தை தனிப் பயிராக பெரும்பாலும் சாகுபடி செய்வதில்லை. தமிழகத்தில் விவசாய நிலங்களை ஒட்டியிருக்கும் சிறுகாடுகள் மற்றும் காடுகளில் இந்த சீத்தா மரங்கள் நிறைய உண்டு. குறிப்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வனம் சார்ந்த பகுதிகள் அதிகம் இருப்பதால் இங்கே சீத்தா பழ விளைச்சல் அதிகம்.அஞ்சூர், ஜெகதேவி, செந்தாரப்பள்ளி, வரட்டானப்பள்ளி, குருவிநாயனப்பள்ளி கிராமங்களில் சீத்தா பழ வியாபாரம் மிகவும் நன்றாக நடக்கிறது.ஆடியில் மொட்டுவிடும் சீத்தா, பிஞ்சாகி காயாகி ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் விற்பனைக்கு வந்து விடுகின்றன. காடுகளிலும் புறம்போக்கு இடங்களிலும் விளையும் சீத்தாவை வியாபாரிகள் மொத்தமாக சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துகளிடம் குத்தகைக்குப் பேசிக் கொள்கிறார்கள். பழுக்கும் பக்குவம் வந்த காய்களைப் பறித்து தர வாரியாகப் பிரித்து, பெட்டிகளில் அடுக்கி விற்பனைக்கு அனுப்பி விடுகிறார்கள். சில விவசாயிகள் தங்கள் நிலங்களில் உள்ள மரங்களில் பறிக்கும் காய்களை சந்தைகளில் வியாபாரிகளிடம் கூடைக் கணக்கில் விற்றுச் செல்கின்றனர். இப்படி பல விவசாயிகளிடம் சிறுக சிறுக வாங்கிய காய்களை வியாபாரிகள் ஒன்றாகச் சேர்த்து வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கிறார்கள்.

**உரம், பூச்சி மருந்து எதுவுமே இல்லை!**

பெட்டியில் அடுக்கப்பட்ட சீத்தா காய்களை கேரளாவிற்கு அனுப்புவதற்காக வேனில் ஏற்றிக்கொண்டிருந்த குருவி நாயனப்பள்ளி வியாபாரி நரசிம்மன் கூறுகையில் “மத்த பயிர்களை போல் சீத்தாவை யாரும் நடவு செய்து உருவாக்குவதில்லை. வவ்வால் மாதிரியான பறவைகள், அணில், குரங்கு எல்லாம் உண்றுவிட்டு போடும் விதை தானாகவே முளைத்து வந்து பலன் தருகின்றது. உரமோ, பூச்சி மருந்தோ இல்லாமல் விளையக்கூடிய பழம் இது. அதனால் சாப்பிடும் அனைவருக்கும் எந்தக் கெடுதியும் வருவதில்லை. அதேநேரம் அதிகப்படியான சளி, சர்க்கரை நோய் இருப்பவர்கள் இதை உண்ணுவதில்லை. கூழ் போல் மிருதுவான சதை இருப்பதால் பற்கள் இல்லாதவர்கள் கூட சீத்தா பழத்தை விரும்பிச் சாப்பிடுகிறார்கள். சென்னை, கேரளாவில் விதையை நீக்கிவிட்டு பழக்கூழை மட்டும் பதப்படுத்தி ஐஸகிரீம் செய்ய பயன்படுத்துகிறார்கள்.

**நல்லா விளையும்! ஆனால் வைத்து விற்கமுடியாது!**

எங்களை போன்ற வியாபாரிகள் தோட்டத்துகாரர்களிடம் மொத்தமாக குத்தகைக்கு பேசிக்கொள்வோம். பஞ்சாயத்துக்கு உட்பட்ட மரங்களை உள்ளூரில் யாராவது ஏலம் எடுத்திருப்பார்கள். அவர்களிடம் இருந்து மொத்தமாக விலை பேசி காய்களைப் பறிப்போம். பெரும்பாலும் கரட்டுப் பகுதியாவே இருப்பதால் காய்களை பறித்து ஒரு இடம் சேர்ப்பதற்குள் மிகவும் கடினமாக இருக்கும். ஒரு கிலோ பழத்திற்கு பருத்தைப் பொறுத்து

ஒரு ரூபாயிலிருந்து அதிகபட்சம் பதினைந்து ரூபாய் வரைக்கும் விலை கிடைக்கும். காய்களை செடியில் இருந்து பறித்து அதிகபட்சம் நான்கு நாட்களுக்குள் விற்பனை செய்யலாம் என்றால் கறுத்து போய் வீணாகிவிடும். இது ஒன்றுதான் சீத்தா பழ விஷயத்தில் இருக்கின்ற பிரச்சனை. இதைத் தோட்டப் பயிராக நட்டாலும், நன்றாக விளையும் ஆனால் திரண்ட காய்களை இருப்பு வைத்து விற்க முடியாது என்பதால் தான் தோட்டத்தில் தனிப் பயிராக நட யாரும் முன்வருவதில்லை.

**வறட்சிப் பகுதியிலும் வளர்க்கலாம்!**

இயற்கையாகக் கிடைக்கும் சீத்தா ரகத்தில் விதைப் பகுதி அதிகமாகவும் சதைப் பகுதி குறைவாகவும் இருக்கும். ஆனால் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் ‘ஏ.சி.கே – 1’ என்ற சீத்தா ரகத்தை அறிமுகம் செய்திருக்கிறது. இந்த ரகப் பழங்கள் சிறிய விதைகளையும் நிறைய சதைப் பற்றான பகுதிகளையும் கொண்டிருக்கின்றன. கிருஷ்ணகிரி மாவட்டம் ஜீனூரில் இருக்கும் பண்ணையில் கூட தாய்ச்செடி மூலம் இந்த ரக சீத்தா கன்றுகள் உருவாக்கப்பட்டு விற்பனைக்கு கொடுக்கப்படுகின்றன. இது வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய ரகம் என்பதால் மிக குறைந்த அளவு நீர்ப்பாசனம் இருக்கும் பகுதியிலும் இதை நட்டு வருமானம் பார்க்கலாம். ஆனால், சீத்தா பழங்கள் நீண்ட நாட்கள் கெடாமல் தாக்குப் பிடிக்காது என்பது தான் பெரிய குறை. ஆங்காங்கே குளிர்பதனக் கிடங்குகள் இருந்தால் சீத்தா காய்களை இருப்பு வைத்து விற்பனை செய்யலாம்.

**தொடர்புக்கு:**
‘சட்டையில்லா’ சாமியப்பன்,
அலைபேசி: 95974 - 24359